# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● ஜூன் 9, 2018

Weekly E-paper ● June 9, 2018


# நீட் தேர்வை ஒழிப்பதே தீர்வு!


● எழில்.இளங்கோவன்


துப்பாக்கி முனைகளால் கொல்லப்பட்டவர்கள் மக்கள், தூத்துக்குடியில்.

பேனா முனைகளால் கொல்லப்படுகிறார்கள் மாணவர்கள், நீட் தேர்வினால்.

அன்று அரியலூர் அனிதா தூக்கில் தொங்கினார்.

இன்று விழுப்புரம் பிரதீபா, கீர்த்திகா, திருச்சி சுபஸ்ரீ பலியாகிப் போனார்கள் தமிழ்நாட்டில்.

தெலுங்கானா மாநிலம் மயூரி கட்டிடத்தின் ஒன்பதாம் மாடியில் இருந்து மாணவி ஜஸ்லின் கபூரும், டெல்லி துவாராகாவில் 8 அடுக்குமாடியில் இருந்து ஒரு மாணவரும் கீழே குதித்து உயிரைப் பறி கொடுத்துள்ளார்கள்.

அனைவரும் மாணவர்கள், அனைவரும் 18 வயதுக்கு உட்பட்ட இளந்தளிர்கள்.

வாழ்க்கை இருந்தது அவர்களுக்கு. வாழவிடாமல் சாவுக்குள் தள்ளிய அந்த கொடுமைக்குக் காரணம் நீட் எனும் தேர்வு.

தேர்வு மாணவர்களுக்காக இருக்க வேண்டும். மாணவர்களைத் தேர்வுக்காக வதைக்கக் கூடாது. அப்படி மத்திய-மாநில அரசுகளின் வதை காரணமாக மாணவர்களின் மரணங்கள், அடுத்த ஆண்டும் தொடருமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

இந்த ஆண்டு நீட் தேர்வில் தமிழகத்தின் தேர்ச்சி 39.55 விழுக்காடுதான். ஆனால் தமிழகம் கல்வியில் பிறமாநிலங்களை விட முன்னணியில் உள்ள மாநிலம்.


அதே சமயம் கல்வியில் பின் தங்கிய வடமாநிலங்கள் 60.45 விழுக்காடு தேறியுள்ளன.

கல்வியில் மிகமிகப் பின் தங்கிய மாநிலம் பீகார். அம்மாநிலத்தைச் சேர்ந்த மாணவி கல்பனா குமாரி இவ்வாண்டு நீட் தேர்வில், இந்தியாவிலேயே முதலிடத்தில் தேர்ச்சி பெற்றுள்ளார். எப்படி?

கல்பனா குமாரி +2 தேர்வு எழுதக் கல்வித்துறை அனுமதிக்கவில்லை. காரணம் அவரின் பள்ளி வருகைப் பதிவு குறைவாக இருந்ததோடு அவரின் படிப்பும் நாட்டமின்றி இருந்ததுதான். ஆனால் அவர் நீட்டுக்கு அப்போது தயாராகிக் கொண்டிருந்திருக்கிறார். அது எப்படி?

அதே சமயம் சில உயர் அதிகாரிகள் தலையிட்டு, அந்த மாணவிக்குப் +2 தேர்வு எழுத அனுமதி பெற்றுத் தந்ததுடன், அம்மாணவி அத்தேர்வில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

அதே மாணவிதான் நீட் தேர்வில்



இந்தியாவின் முதல் மாணவி.

சி.பி.எஸ்.சி. செய்திக் குறிப்பின்படி பீகாரில் நீட்டுக்கு விண்ணப்பித்தவர்கள் 35,641 பேர்கள்.

தேர்வு முடிந்தபின் சி.பி.எஸ்.சி செய்திக் குறிப்பில் விண்ணப்பித்தோர் 66,071 பேர் என்றும், தேர்வு எழுதியவர்களும் 63,003 பேர் என்றும் சொல்லி இருப்பது குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது.

எனவே பீகாரில் முதல் இடம் பெற்ற கல்பனா குமாரி தேர்வில் ஊழல் நடந்திருப்பதாகக் கல்வியாளர்கள் குரல் எழுப்ப, அந்த மாணவி விசாரணை வளையத்துள் வர இருப்பதாக நாளிதழில் செய்தி வெளியாகியிருக்கிறது.

இந்திய அளவில் அதிகமான அரசு மருத்துவக் கல்லூரிகள் (24) இருக்கும் மாநிலம் தமிழகம். இந்தியாவின் மருத்துவத் தலைநகரம் என்று கூடச் சொல்லலாம். இக்கல்லூரிகளில் படிப்பதற்கு ஏறத்தாழ 15,000 ரூபாய்தான் ஆகிறது. பிற மாநிலங்கள், மற்றும் பாகிஸ்தானில் இருந்தும் கூட நோயாளிகள் இங்கு வருகிறார்கள்.

இப்படிப்பட்ட தமிழக மருத்துவக் கல்லூரிகளில் தமிழர்களின் இடங்களைக் குறிவைத்து, வட இந்திய மருத்துவர்களைக் கூடுதலாக நுழைக்க நீட் தேர்வை மத்திய அரசு நுழைத்துள்ளதாகவும் தெரிகிறது.

நீட் தேர்வுதான் சிறந்த மருத்துவர்களை உருவாக்கும் என்பது அப்பட்டமான பொய்.

அப்படியானால் 1984ஆம் ஆண்டுக்கு முன்னர் சிறந்த மருத்துவர்களைத் தமிழகத்திற்குத் தந்தது நீட் தேர்வா? 1984–2006, 23 ஆண்டுகள் நுழைவுத் தேர்வின் மூலம் சிறந்து விளங்கிய தமிழக மருத்துவர்களை எந்த நீட் தேர்வு, தேர்வு செய்தது?

“அடுத்த 5 ஆண்டுகளில் தமிழக மருத்துவ மனைகளில் மனித ஆற்றல் குறைந்து விடும். சிறந்த வல்லுநர்கள் இருக்க மாட்டார்கள்... கார்டியாலஜி, கேன்சர் குறித்த சிகிச்சைகள், பல்மனாலஜி போன்ற துறைகள் ஏற்கனவே தனியாரிடம் கொடுக்கப்பட்டு வருகின்றன. அனைத்தையும் பெரு முதலாளிகளிடம் ஒப்படைக்க நினைக்கிறது பா.ஜ.க. அப்படிச் செய்யும் போது தமிழகத்தில் எதிர்பார்த்த தரம் குறையும். போதிய மருத்துவர்கள் இல்லை என்று கூறி கார்டியாலஜி மட்டுமில்லாமல் பொது மருத்துவம், அரசு மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை அனைத்தையும் தனியாரிடம் ஒப்படைக்கப் போவதாகச் சொல்வார்கள்” என்று நீட் தேர்வின் பின் விளைவை விளக்குகிறார். தமிழ்நாடு நலவாழ்வு இயக்கத் தலைவரும், மருத்துவருமான ரெக்ஸ் பீட்டர்.

இப்படிப்பட்ட நீட் தேர்வை கொண்டுவராமல் விடமாட்டோம் என்று சூளுரை செய்யும் மத்திய அமைச்சர் பொன்.இராதா கிருஷ்ணனின் சென்னை விமானநிலையப் பேட்டி ஒன்று இந்தியா முழுவதும் நீட்டுக்கு எதிர்ப்பு வலுக்கிறது என்ற உண்மையை உறுதிப்படுத்துகிறது.

சென்ற ஆண்டு நீட்டுக்கு எதிராகச் சட்டமன்றத்தில் இரண்டு சட்ட முன்வடிவங்களை இயற்றி குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைத்தது தமிழக அரசு.

கோப்பு அங்கு தூங்குகிறது. அமைச்சர்கள் இங்கு தூங்குகிறார்கள்.

மக்களும் தூங்கினால், நீட் தேர்வும் தொடரும், நீட் (தற்)கொலைகளும் தொடரலாம்.

இதைத் தடுக்க ஒரே வழி நீட் தேர்வைத் தமிழகத்தில் ஒழிப்பதுதான்! வேறு வழியில்லை!●

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியிடுபவர்
கோ.தினகரன்

இணையதளம்
www.keetru.com
www.peravai.com
www.peravainoolagam.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
122/130 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162

## ஒரு வேண்டுகோள்

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறுகிற மாவட்ட, மண்டலக் கூட்டங்கள், தெரு முனைக் கூட்டங்கள், கருத்தரங்கக் கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள் உள்ளிட்ட பிற நிகழ்வுகளில் செய்திகளை உரிய புகைப்படத்துடன் கருஞ் சட்டைத் தமிழர் இணைய முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பொறுப்பாளர்கள் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

- ஆசிரியர் குழு

## மலேசிய மாணவர்களுடன் சிற்பி.



**07.06.2018** அன்று மலேசிய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நடிகர் மயில்சாமி ஆகியோருக்குப் பேரவைப் பொதுச் செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன் எழுதிய ‘இதுதான் ராமராஜியம்’ நூலைத் துணைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ் வழங்குகிறார். உடன் மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ், ராஜ்மோகன் ஆகியோர்.

## வேலூர் ஆர்ப்பாட்டத்தில் சிங்கராயர்



**இ**ராஜஸ்தான் மாநில பிரம்மா கோயிலுக்குள் இந்திய குடியரசுத் தலைவரை நுழைய விடாமல் தடுத்த பூசாரியைக் கைது செய்யக்கோரி 07.06.2018 அன்று வேலூரில் திராவிடர் கழகம் நடத்திய ஆர்பாட்டத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் அ.சிங்கராயரின் கண்டன உரை.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அவர் பிரணாப்
## இவர் முகர்ஜி!

**ஆர்**.எஸ்.எஸ்.அழைப்பை ஏற்று, நாக்பூரில் நடந்த அதன் பயிற்சி முகாமின் இறுதி நாளில், அதன் விருந்தினராகக் கலந்து கொண்டார் பிரணாப் முகர்ஜி.

அவர் ஒரு காங்கிரஸ்காரர். முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர். அனைத்து இந்திய மக்களுக்கும் சாதி, மத வேறுபாடற்ற தலைவராக இருந்தவர் அவர்.

இப்பொழுது ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சியில் பங்கேற்றதன் மூலம் அவர் உண்மையில் அந்த அமைப்பின் கொள்கைகளைத் தாங்கிய குடியரசுத் தலைவராகவே இருந்துள்ளார் என்பது தெரிகிறது.

“பாரத மாதாவின் தவப்புதல்வரான ஹெட்கேவருக்கு மரியாதை செலுத்துவதற்காக இங்கு வந்துள்ளேன்” - ஆர்.எஸ். எஸ். தலைமையக வரவேற்புப் புத்தகத்தில் இப்படி எழுதி இருக்கிறார் பிரணாப்.

பூனை வெளியே வந்து விட்டது.

“சகிப்புத் தன்மைதான் நமது பலம். நாட்டின் பன்முகத் தன்மையை நாம் கொண்டாட வேண்டும்,” என்று பிரணாப் அங்கே பேசியிருக்கிறார்.

ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாசாரம் என்று ‘ஏக இந்தியா’ கொள்கையைக் கொண்டிருக்கும் ஆர்.எஸ்.எஸ். கூட்டத்தில் பன்முகத் தன்மையைப் பேசுகிறார் பிரணாப் முகர்ஜி என்றால், அதை ஏற்றுக் கொள்ளச் சற்றுக் கடினமாகத்தான் இருக்கிறது.

ஒடுக்கப்பட்ட மக்கள் பசுக் காப்பாளர்களால் அடக்கப்படுவதும், ஒடுக்கப்படுவதும், கொல்லப்படுவதும் ஒருபுறம் நடக்கும்.

மறுபுறம் முற்போக்கு எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள்.

சிறுபான்மை மக்களின் உடமைகள் தாக்கப்படுவதும், பெண்கள் பாலியல் வன்முறைகளுக்குப் பலியாவதும் நடந்து கொண்டு இருக்கும்!

இவைகளுக்குப் பின்புலமாக ஆர்.எஸ்.எஸ். இருக்கும். ஆனால் சகிப்புத்தன்மையைப் பற்றி மட்டும் விடாமல் இவர்கள் பேசுவார்கள்.

அண்மையில் இராஜஸ்தான் மாநிலம், அஜ்மீர் மாவட்டம் புஷ்கரில் உள்ள பிரம்மா கோயிலுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் தன் மனைவியுடன் சென்றுள்ளார்.

ஆனால் அவரின் சாதியைக் காரணம் காட்டி, அவரைக் கோவிலுக்குள் நுழைய, அக்கோயிலின் பூசாரி அனுமதிக்கவில்லை.

சர்வ வல்லமையும், அதிகாரமும் படைத்த குடியரசுத் தலைவரால் அந்தப் பூசாரியை ஒன்றும் செய்ய முடியவில்லை.

என்றாலும் ‘சகிப்புத் தன்மையுடன்’ சகித்துக் கொண்டு, கோயிலின் வெளிப்படிக்கட்டில் சூடம் ஏற்றிவிட்டுத் திரும்பி இருக்கிறார் குடியரசுத் தலைவர்.

இதைத்தான் சகிப்புத்தன்மை என்கிறார் பிரணாப் முகர்ஜி!

காங்கிரஸ் கட்சியின் எதிர்ப்பை மீறி இவர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு இருக்கிறார் என்பதில் இருந்து இவரின் இனப்பற்று புரிகிறது.

இது போன்ற நடைமுறைகள் வருங்காலங்களில் தொடர்வது நாட்டுக்கும், மக்களுக்கும் நல்லதல்ல!

இன்றைய குடியரசுத் தலைவரும் ஆர்.எஸ்.எஸ். காரர்தான். இராஜஸ்தான் பிரம்மா கோயில் அவருக்குப் பாடம் புகட்டியிருக்கிறது.

அவர்கள் பாடம் கற்றுக் கொள்கிறார்களோ இல்லையோ, மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

குடியரசு தலைவர் மாளிகைக்குப் போனவர் பிரணாப்.

ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாமுக்குப் போனவர் முகர்ஜி.

அவ்வளவுதான்!

# ஐரோப்பியப் பேராசிரியர்களுடன் ஓர் உரையாடல்!

● சுப.வீரபாண்டியன்



இங்கிலாந்தில் உள்ள எடின்பரோ பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹியூகோ கோரிஞ் (Hugo Gorringe), பிரிஸ்டல் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆண்ட்ரு வையாட் (Andrew Wyatt) இருவரும் தமிழக அரசியல், தலித் அரசியல் ஆகியனவற்றில் ஈடுபாடு உடையவர்கள் என்பதோடு, அவை குறித்த பல ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளனர். இருவரும் சமூகவியல், அரசியல் துறைப் பேராசிரியர்கள்.

அவர்களின் கட்டுரைகள் சிலவற்றைப் படித்திருப்பதால், இங்கே (இங்கிலாந்து) தங்கியிருக்கும் நேரத்தில் அவர்களைச் சந்தித்து உரையாட வேண்டும் என்ற ஆவல் எனக்குள் இருந்தது. லீட்ஸ் (Leeds) நகரில் உள்ள என் மகனின் நண்பர் சரவணன் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருவதாகக் கூறினார்.

அரசியல் குறித்து மட்டுமின்றி, தமிழ்த் திரைப்படங்கள் குறித்தும், அவற்றில் உள்ள அரசியல் குறித்தும் கூட அவர்கள் கட்டுரைகள் எழுதியுள்ளனர். மதுரையை மையமாக வைத்து வெளிவந்துள்ள தமிழ்த் திரைப்படங்கள் குறித்து ஹியூகோ எழுதியுள்ள கட்டுரை உண்மையாகவே நமக்கு வியப்பளிக்கிறது. மதுரை வீரன் தொடங்கி கபாலி வரையில் பல்வேறு படங்கள் குறித்து அக்கட்டுரையில் அவர் ஆய்வு நிகழ்த்தியுள்ளார். மதுரையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நன்மாறனைப் பார்த்து ஒருமுறை, "உங்கள் மதுரைக்காரர்கள் எல்லோரும் முதுகில் சட்டைக்குப் பின்னால் அரிவாள் (sickle) வைத்திருப்பார்களா" என்று கேட்டார்களாம். அந்த அளவிற்கு நம் திரைப்படங்கள் மதுரை பற்றிய ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆண்ட்ரு வையாட் திமுக வைப் பற்றியே ஒரு ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார். அவற்றுள் எனக்குச் சில கருத்து வேறுபாடுகளும் உள்ளன என்றாலும், எங்கோ இருந்துகொண்டு, நம் நாட்டு அரசியல் குறித்து இந்த அளவிற்கு எழுதியுள்ள அவர்களின் உழைப்பைப் பாராட்டித்தானே ஆகவேண்டும்.

எதிர்பாராவிதமாக, சென்றவாரம், நண்பர் சரவணன் ஒரு நல்ல செய்தியைக் கொண்டு வந்தார். அந்தப் பேராசிரியர்களைத் தொடர்பு கொண்டதாகவும், அவர்கள் இருவரும் தாங்களே என்னைப் பார்க்க லீட்ஸ் நகருக்கு வருவதாகச் சொல்லியுள்ளனர் என்றும் கூறினார். அவர்களின் பெருந்தன்மை மகிழ்வளித்தது.

21.05.2018 மாலை, லீட்ஸ் நகரில் உள்ள என் மகன் பாரதிதாசன் வீட்டில் அந்த சந்திப்பு நடந்தது. ஏறத்தாழ நான்கு மணி நேரம் அவர்கள் என்னுடன் உரையாடினர். நண்பர் சரவணனும், என் மருமகள் வித்யாவும் உடனிருந்து, அவ்வப்போது மொழிபெயர்ப்பில் உதவினர். சரவணன் நாங்கள் பேசியதைக் குறிப்புகளாகவே எடுத்துத்தந்து பேருதவி செய்தார். அது ஒரு நீண்ட உரையாடல். அதன் சாரத்தை மட்டும் இங்கு தருவதற்கு முயல்கிறேன்.

தமிழக அரசியலை உற்று நோக்கிவரும் அவர்கள், "புதிதாக இருவர் தமிழக அரசியலுக்குள் வந்துள்ளனரே, அவர்களின் தாக்கம் வரும் தேர்தல்களில் எப்படியிருக்கும்?" என்று, கமல், ரஜினி பற்றிய வினாவோடு உரையாடலைத் தொடங்கினர். என்னையும், என் அரசியலையும் நன்கு அறிந்து வைத்திருந்த அவர்கள், என் விடையைத் திமுக சார்ந்ததாகவே பார்ப்பார்கள் என்றாலும், நான் எனக்குத் தோன்றிய ஒரு விடையைக் கூறினேன். இருவரில் ஒருவர் இன்னும் கட்சியே தொடங்கவில்லை. இருவருமே பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிட மாட்டார்கள் என்றே கருதுகிறேன். இருப்பினும், இப்போது சொல்லப்படும் கருத்துகள் மிகவும் முன்கூட்டியதாக (prematured) அமைந்துவிடும்" என்றேன்.

ஹியூகோ "கொஞ்சம் கொஞ்சம் தமிழ் தெரியும்" என்று சொன்னாலும், நன்றாகவே தமிழ் பேசினார். அவர் 4 வயது தொடங்கி 12 வயது வரையில் மதுரையில் இருந்திருக்கிறார். அங்கு பள்ளியிலும் படித்திருக்கிறார். திருமாவளவன் மீதும், வி.சி.க மீதும் பற்றுடையவராக இருக்கிறார். சிறுத்தைகள் கட்சியில் சிந்தனைச் செல்வன், ரவிக்குமார், வன்னி அரசு எல்லோரையும் அவருக்குத் தெரிந்திருக்கிறது. ஸ்டாலின் ராஜாங்கத்துடன் தொடர்பில் இருக்கிறார்.

ஆண்ட்ரு பிறந்ததே பூனாவில்தானாம். 15 வயது வரையில் அங்குதான் இருந்திருக்கிறார். ஆனால் இந்தியோ, தமிழோ தெரியாது என்றார். திமுக அரசியலைத் தொடர்ந்து கவனித்து வருகிறார். கலைஞரின் இப்போதைய உடல்நலம் வரையில் இருவரும் கேட்டுத் தெரிந்துகொண்டனர்.

"உங்கள் கட்டுரையில், சத்தியவாணிமுத்துக்குப் பிறகு, திமுகவில் தலித் சமூகத்தைச் சேர்ந்த அறிவாளிகள் இல்லை என்பதுபோல் எழுதியுள்ளீர்களே, அது எப்படிச் சரியாகும்" என்று ஆண்ட்ருவைப் பார்த்துக் கேட்டேன். "அவருக்குப் பிறகு, திமுக வின் முன்னணித் தலைவர்களாக தலித் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரும் இல்லைதானே?" என்று கேட்டார். "ஆ. ராசா, வி.பி. துரைசாமி போன்றவர்கள் இல்லையா? ஆ.ராசா ஒரு சிறந்த படிப்பாளி, மத்திய அமைச்சர் பொறுப்பு வரையில் வகித்திருக்கிறாரே" என்று நான் சொன்னபோது, "ஆம் உண்மைதான், அவரை நன்றாகத் தெரியும். கட்டுரையில் அதனைச் சரி செய்து கொள்கிறேன்" என்றார் பெருந்தன்மையோடு! திமுக மாவட்டச் செயலாளர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு ஆகியோரைப் பற்றி எல்லாம் அவர் பேசினார்.

ஹியூகோவைப் பொறுத்தமட்டில், திராவிட இயக்கம், தலித் மக்களுக்குப் பெரிதாக ஏதும் செய்யவில்லை என்ற எண்ணம் ஆழப் பதிந்துள்ளது. அவருக்குத் தமிழ்நாட்டிலிருந்து தகவல் சொன்னவர்கள் அப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள்.

"தேர்தல்களில் தலித் மக்களுக்கு இடங்களை விட்டுக் கொடுக்கலாமே?" என்றார். இப்போதும் விடுதலைச் சிறுத்தைகள் திமுக வுடன்தான் உள்ளனர். இன்று நேற்றல்ல, திமுக தலித் உறவு சமூக அளவிலும், தேர்தல் அளவிலும் மிகப் பழையது என்றேன். அப்படியா என்றார். பழைய நிகழ்ச்சி ஒன்றை எடுத்து விளக்கினேன்.

பேராசிரியர் நீலகண்டன் (நெல்லை) ஆய்வேட்டிலிருந்து அந்தச் செய்தியை எடுத்துச் சொன்னேன். 1937 ஆம் ஆண்டு தேர்தலில், சாத்தூர் அருப்புக்கோட்டை தொகுதியில் வி.வி.ராமசாமி அவர்களும், பழனி தொகுதியில் W.P.A. சௌந்தரபாண்டியனாரும் போட்டியிட்டனர். அப்போது அவ்விரு தொகுதிகளில், தலித் தலைவர்கள் சிவராஜ், மீனாம்பாள் சிவராஜ் ஆகியோரும் போட்டியிட்டனர். இறுதி நேரத்தில், சிவராஜ் இணையருக்கு ஆதரவாக, நீதிக் கட்சி வேட்பாளர்கள் இருவரும், இரண்டு தொகுதிகளிலிருந்தும் விலகிக் கொண்டனர் என்பதை எடுத்துச் சொன்னேன். "அப்படியா, இது எங்களுக்குப் புதிய செய்தி" என்று சொல்லிக் குறித்துக் கொண்டனர். பேராசிரியர் நீலகண்டனைத் தொடர்பு கொண்டால் இன்னும் பல உண்மைச் செய்திகள் சான்றுகளுடன் உங்களுக்குக் கிடைக்கும் என்று கூறினேன்.

"தேர்தலில் திமுக தனிப் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றாலும், சிறுத்தைகள் கட்சியினரையும் ஆட்சியில் பங்கேற்க அழைப்பாளர்களா? அமைச்சரவையில் திருமாவளவனுக்கு ஒரு நல்ல பொறுப்பை அளிப்பார்களா?" என்று ஹியூகோ கேட்டார்.

"உங்களைப் போலவே சிறுத்தைகளின் மீதும், திருமாவின் மீதும் நானும் அன்பு கொண்டவன். ஆனாலும் நடைமுறைச் சாத்தியம் என ஒன்று இருக்கிறதல்லவா? சிறுத்தைகள் மட்டுமின்றி வேறு கட்சியினரும் கூட்டணியில் இருப்பார்கள். தனிப் பெரும்பான்மை பெற்ற பின்பும், எல்லோருக்கும் அமைச்சரவையில் இடம் அளிப்பது நல்ல முன்மாதிரியாக இருக்கலாம். ஆனால், தம் கட்சியினருக்கு உரிய வாய்ப்பளிக்க இயலாமல் போய்விடும் இல்லையா?" என்று கேட்டேன்.

"பிறகு எப்படிச் சமூக நீதி வரும்?" என்று கேட்டனர். "தோழமைக் கட்சிகளுக்கு இடம் அளிப்பதால் மட்டும்தான் சமூக நீதியைக்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

# கமல்-ரஜினி மீண்டும் இணையும் படம் ‘அரசியல்’

● மா.உதயகுமார்

காவிரியில் மீண்டும் கல் எறிந்து குழப்பத்தை விளைவிக்கும் முயற்சியில் இரு நடிகர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பல ஆண்டு சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆணையம் தன்னாட்சி பெற்றதாக இருக்க வேண்டும், கர்நாடக அரசின் தலையீடு இல்லாமல் செயல்பட வேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்க்கும் இந்நிலையில் ஏட்டிக்குப் போட்டியாக “இரு மாநில மக்களும் சகோதர உணர்வுடன் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். காவிரி பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்க்க வேண்டும்.” என்று கர்நாடக முதல்வர் குமாரசாமியைச் சந்தித்த பின் கமலஹாசன் கருத்துத் தெரிவித்திருக்கிறார். கருத்து தெரிவித்த அதே கையோடு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், விவசாய சங்க நிர்வாகிகள் ஆகியோரின் கண்டனங்களையும் வாங்கிக் கட்டிக்கொண்டிருக்கிறார். ஆனால் ரஜினி மட்டும் அவர் கருத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், கர்நாடக முதல்வர் குமாரசாமி என்ன செய்வது என்று தெரியாமல் முழித்துக்கொண்டிருக்கும் வேளையில், தீர்ப்பை முடக்கும் வகையில் கமல்ஹாசனும், குமாரசாமியும் பேச்சுவார்த்தை என்ற கருத்தை வெளியிட்டிருப்பது உள் நோக்கம் கொண்டது. இது கமலஹாசன் தமிழக மக்களுக்குச் செய்யும் பச்சைத் துரோகம்.

அண்டை மாநிலத் தலைவர்களோடு இன்னுறவைப் பேணத் தெரியாதவர்களா தமிழகத் தலைவர்கள்? ஓர் எடுத்துக்காட்டு. முன்னாள் பிரதமர் தேவகவுடா கலைஞரைப் பற்றிய பேட்டியில், “இங்கே தேவராஜ் அர்ஸ் முதல்வராக இருந்தபோது, அங்கே முதல்வர் கருணாநிதி. தேவராஜ் அர்ஸை நேரில் சந்தித்து, ‘தமிழக விவசாயிகள் தவிக்கிறார்கள்; மறுத்துவிடாதீர்கள்’ என்று உருக்கமாகத் தண்ணீர் கேட்டார். நான் அப்போது எதிர்க்கட்சித் தலைவர். ‘எக்காரணம் கொண்டும் தமிழகத்துக்குத் தண்ணீர் கொடுக்கக் கூடாது’ என்று தேவராஜ் அர்ஸிடம் எச்சரித்துவிட்டு வந்திருந்தேன். முதல்வரைச் சந்தித்ததோடு, யாருமே எதிர்பார்க்காத சூழலில், என்னையும் வந்து சந்தித்தார். ‘நீங்களும் ஒரு விவசாயி. சக விவசாயிகளின் வலியைக் கொஞ்சம் புரிந்துகொள்ளுங்கள்... மனது வையுங்கள்’ என்று என் கையைப் பற்றிக்கொண்டார். இந்த அணுகுமுறை என்னை நெகிழச் செய்துவிட்டது. அன்று தொடங்கி கவனித்துவருகிறேன். அவர் முதல்வராக இருக்கும்



காலகட்டத்தில் இதுபோன்று எப்படியாவது தண்ணீரை வாங்கிவிடுவார்.” என்று கலைஞரின் அரசியல் நாகரிகத்தையும் சாதுரியத்தையும் பாராட்டினார். அரசியலில் இப்போது அடியெடுத்து வைத்திருக்கும் கமலஹாசனும், அடியெடுத்து வைக்கலாமா வேண்டாமா என்று குழம்பிக் கொண்டிருக்கும் ரஜினிகாந்தும் அரசியல் ஆழம் கண்ட தலைவர்கள் இருக்கும் தமிழ்நாட்டில் உளறிக்கொட்டுகிறார்கள்.

இந்திய மாநிலங்களில் அரசியலில் முதிர்ச்சி பெற்ற மாநிலம் தமிழ்நாடு. இந்தியத் தலைவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்பவர்கள் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள். தந்தை பெரியாரின், பேரறிஞர் அண்ணாவின் பாதையில் இங்கு அரசியல் களம் அமைந்திருக்கிறது. உரிமைகளுக்காகப் போராடும் அதே வேளையில் சகோதர உணர்வுடனே அண்டை மாநிலங்களோடு உறவைப் பேணி வருகிறது தமிழ்நாடு. அண்டை மாநிலத்தோடு இவ்வளவு பிரச்சினைகளுக்கு இடையிலும் இவ்வளவு இணக்கமாகத் தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த மாநிலமும் இருக்க முடியாது.

இந்த விவரங்கள் தெரியாமலா கமலும் இரஜினியும் பேசி வருகிறார்கள்? பல ஆண்டுகளுக்கு முன் சேர்ந்து நடிப்பதை விடுத்த கமலும் ரஜினியும் இப்போது ஒரு பெருந்தயாரிப்பாளரின் முதலீட்டில் மீண்டும் அரசியலில் கை கோர்த்திருக்கிறார்கள். நடிகர்களாகத் தங்கள் பணியைச் சரியாகச் செய்கிறார்கள். ●

முன்பக்கத் தொடர்ச்சி...

*காப்பாற்ற முடியும் என்று நான் கருதவில்லை. தங்கள் கட்சியில் உள்ள தலித் மக்கள், மதச் சிறுபான்மையினர் ஆகியோருக்கு உரிய இடம் வழங்குவதும் சமூக நீதிதானே?' என்று என் பார்வையை வெளியிட்டேன். திமுக வில் அவ்வாறு பதவிகள் வழங்கப்பட்டுள்ள தகவல்களையும் கூறினேன்.*

*ஆண்ட்ரு குறுக்கிட்டார். "திமுக வில் தலித் மற்றும் பெண்களுக்கு உரிய இடம் வழங்கப்பட்டுள்ளதா?' என்பது அவர் கேள்வி. தன் கட்டுரையிலும் அவர் இதனைப் பதிவு செய்துள்ளார். "எல்லாத் தேர்தல்களிலும் உரிய பங்கு சென்று சேர்ந்துள்ளது என்று சொல்லிவிட முடியாதுதான். எனினும் 1996 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில் 33% திமுக வேட்பாளர்கள் பெண்கள் என்பது போன்ற உண்மைகளையும் நாம் புறந்தள்ளிவிட முடியாது" என்றேன்.*

*தேர்தல், அமைச்சரவை ஆகியனவற்றில் பெற்றுள்ள இடம் என்பதை ஓர் அளவுகோலாகக் கொள்வதில் பிழையில்லை. அதே நேரம், ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தலித், சிறுபான்மையினர், பெண்கள் ஆகியோருக்குத் திமுக செய்துள்ள நியாயங்களை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் அல்லவா!' என்றும் விளக்கம் சொன்னேன்.*

*பிறகு நெடுநேரம், ஈழம் பற்றிய உரையாடல் நடைபெற்றது. 2009 ஆம் ஆண்டு, ஈழப் போரில் ஒரு பின்னடைவு ஏற்பட்டபோது, திமுக ஏன் பதவி விலகவில்லை என்று கேட்டனர். இந்தக் கேள்வி என்னிடம் பலரால், பல இடங்களில் கேட்கப்பட்டுள்ளது. நானும் சலிப்பின்றி விடை சொல்லியுள்ளேன். இங்கும் அவற்றை எடுத்துரைத்தேன். இதற்கான நீண்ட விளக்கமாக, நான் எழுதி, திமுக தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள "ஈழம், தமிழகம், நான் சில பதிவுகள்" என்னும் நூலைக் குறிப்பிட்டேன். அந்த நூல் பற்றிக் கேள்விப்பட்டிருப்பினும், அது தமிழில் மட்டுமே உள்ளதால், அதனைப் படித்துத் தெரிந்துகொள்ள இயலவில்லை என்றனர். தமிழ்நாட்டிலிருந்து அவர்களுடன் தொடர்பில் உள்ளவர்கள் அந்நூல் பற்றிய செய்திகளை அவர்களிடம் எடுத்துச் சொல்ல மாட்டார்கள்.*

*திமுக வைப் பற்றிய விமர்சனங்கள் இருப்பினும், அடிப்படை ஜனநாயகம் உள்ள கட்சி என்பதிலும், இன்று தமிழகத்தில் உள்ள மற்ற கட்சிகளை விட அதுவே மேலானது என்பதிலும் அவர்களுக்கு ஓர் உடன்பாடு இருக்கவே செய்தது.*

*"நிறையச் செய்திகளை பகிர்ந்து கொண்டோம். திராவிட இயக்கம் ஒன்றுமே செய்யவில்லை என நாங்கள் சொல்லவில்லை. ஆனால் இன்னும் நிறைய எதிர்பார்க்கிறோம்" என்று உரையாடலை முடித்தனர்.*

*உரையாடலுக்குப் பிறகு நான் பெற்ற சில உணர்வுகளை இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன்.*

*1. ஜனநாயகம், சமூக நீதி ஆகியனவற்றிற்காகவே தோற்றுவிக்கப்பட்டு, இன்றும் அந்தப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கும் திமுக, தலித், சிறுபான்மையினர், பெண்கள் ஆகியோருக்கு மேலும் உரிய இடங்களை வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நியாயமானதே, அதனைத் திமுக கவனத்தில் கொள்ளும் என்பது என் நம்பிக்கை.*

*2.திராவிட இயக்கமும், திமுக வும் ஒடுக்கப்பட்டோருக்குச் செய்துள்ள நன்மைகள் பல, வெளி உலகிற்கு இன்னும் போதுமான அளவிற்குக் கொண்டு செல்லப்படவில்லை. ஆனால் எதிர்க்கருத்துகள் திட்டமிட்டுப் பெரிய அளவில் சொல்லப்படுகின்றன. திமுக வினால் பயன் பெற்றோர் சிலரே கூட அப்படி ஒரு எதிர்ப்பார்வையை வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.*

*3. இருளை அகற்றுவதற்கான ஒரே வழி ஒளி பாய்ச்சுவதுதான். தமிழில் மட்டும் எழுதினால் போதும் என்றில்லாமல், திராவிட இயக்கம் மற்றும் திமுக செய்துள்ள பணிகளை வேற்று மொழிகளிலும், குறிப்பாக ஆங்கிலத்தில் கொண்டு செல்லவேண்டும். எல்லா நூல்களையும் கொண்டு செல்வது இயலாதெனினும், சிலவற்றை முழுமையாகவும், சிலவற்றைச் சாரமாகவும் (குறுநூல்கள் அல்லது கட்டுரைகள் வடிவில் ) வெளியிட வேண்டும்.*

*4. அன்று தொட்டு இன்று வரையிலான திராவிட இயக்கச் செய்திகளை விவாதிப்பதற்கு, கனமான காலாண்டு இதழ்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் கொண்டுவரப்பட வேண்டும். இத்தகைய பணிகளைத் திமுக தலைமையே மேற்கொண்டு செய்வது பொருத்தமாக இருக்கும்.*

*5. சமூக வலைத்தளங்களை மேலும் விரிவாக நாம் பயன்படுத்த வேண்டும்.*

*தமிழக அரசியலில் ஈடுபாடு கொண்டு ஆய்வு செய்துவரும் பேராசிரியர்கள் இருவருக்கும் நம் அன்பும், நன்றியும்!*

●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.